**செ. கு. எண்**:393 **நாள்**:05.11.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 5.11.2012

சென்னை பெருநகர காவல், நொளம்பூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. M.தசரதன் அவர்கள் 28.10.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாநகரம், போக்குவரத்துப் பிரிவு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. R.J.அமிர்தராஜ் அவர்கள் 28.10.2012 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம் ஆயுதப் படை பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. நாராயணன் அவர்கள் 29.10.2012 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. R.மணி அவர்கள் 29.10.2012 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், சாணார்பட்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S.அப்துல் வகாப் அவர்கள் 31.10.2012 அன்று திண்டுக்கல் – நத்தம் ரோடு அருகே எற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகர், விளக்குத்தூண் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. R.கண்ணன் அவர்கள் 1.11.2012 அன்று பழங்காநத்தம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. நாராயணன், திரு. மணி, திரு. கண்ணன், தலைமைக் காவலர்கள் திரு. தசரதன், திரு. அமிர்தராஜ் மற்றும் திரு. அப்துல் வகாப் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. நாராயணன், திரு. மணி மற்றும் தலைமைக் காவலர் திரு. அமிர்தராஜ், சாலை விபத்தில் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. கண்ணன், தலைமைக் காவலர் திரு. அப்துல் வகாப் மற்றும் மாரடைப்பால் காலமான தலைமைக் காவலர் திரு. தசரதன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**